பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 05 2025          7 15

வியாழக்கிழமை          காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைக்குப் பிறகு பாகிஸ்தான் அத்துமீறினால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது.

2. ஆபரேஷன் சிந்தூர் குறித்து இன்று நடைபெறும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மத்திய அரசு விளக்கம் அளிக்க உள்ளது.

3. ஆபரேஷன் சிந்தூர் குறித்து வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு எடுத்துரைத்தார்.

4. இந்தியா - ஈரான் இடையே கூட்டுக் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

5. கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியின் வில்வித்தைப் பிரிவில் தமிழகத்தைச் சேர்ந்த சர்வேஷ் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

தீவிரவாதிகளுக்கு எதிரான சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு பாகிஸ்தான் அத்துமீறினால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலையடுத்து, நேற்று முன்தினம் நள்ளிரவு பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதிகளில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் தாக்குதல் நடத்திய நிலையில், பாகிஸ்தான் தேவையற்ற நடவடிக்கையில் ஈடுபட்டால் இந்தியா சார்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் எல்லைப் பகுதியை ஒட்டிய ராஜஸ்தானில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

எல்லைப் பகுதிகளில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் மற்றும் ராஜஸ்தான் காவல்துறையினர் ஆகியோர் இணைந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னதாக தலைநகர் ஜெய்ப்பூரில் ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா, உயர்நிலைக் குழுக் கூட்டத்தை நடத்தினால் அப்போது எல்லைப் பகுதிகளில் தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

மத்திய அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பேரிடர் மேலாண்மை மற்றும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் பேசிய ராஜஸ்தான் தலைமைச் செயலாளர் திரு. சுதான்ஷ் பந்த், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்,

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு இன்று அழைப்பு விடுத்துள்ளது.

இக்கூட்டத்தில் ஆபரேஷன் சிந்தூர் குறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அரசு சார்பில் விளக்கம் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக சமூக வலைதளத்தில்

பதிவிட்டுள்ள நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் நாடாளுமன்ற வளாக நூலக கட்டிடத்தில் காலை 11 மணிக்கு நடைபெறும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பாகிஸ்தான் ராணுவம் தாக்குதலில் ஈடுபட்டால் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் ஜம்மு-கஷ்மீரை சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜம்மு பகுதில் சர்வதேச எல்லை மற்றும் எல்லைக் கோட்டுப் பகுதியில் வசிப்பவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

ரஜவ்ரி மற்றும் பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் நேற்று நடத்தி தாக்குதலில்12 பேர் உயிரிழந்து 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் தற்போது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூஞ்ச் பகுதிகளைச் சேர்ந்த மக்களும் தாங்களாகவே பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அக்னூர் பகுதியில் எல்லைக் கோட்டு அருகே வசிப்பவர்களும் பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லுமாறு அரசு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்படும் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கிடையே சிந்தூர் தாக்குதலில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினருக்கு ஆதரவு தெரிவித்தும், பாராட்டியும் ஜம்முவில் நேற்று ஏராளமானோர் பேரணி சென்றதாகவும் எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

லே விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டதன் காரணமாக பிற பகுதிகளுக்கு செல்ல இயலாத சுற்றுலாப் பயணிகள் கட்டணமில்லாமல் தங்குவதற்கு லடாக் தங்கும் விடுதிகள் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு பாதுகாப்பு காரணமாக லே விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

ஏற்கனவே விடுதியில் தங்கியிருந்து காலி செய்து சென்ற சுற்றுலாப் பயணிகள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லே பகுதிக்கு இயக்கப்படவிருந்த அனைத்து விமான சேவைகளும் ரத்து செய்யப்பட்டதை அடுத்து, ஆயிரக்கணக்கான சுற்றுலாம் பயணிகள் தற்போது காத்துக்கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதியும், அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக லடாக் தங்கும் விடுதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் காயமடைந்த பாதுகாப்புப் படையினருக்காக ஜம்மு-கஷ்மீரை சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் ரத்த தானம் செய்துள்ளனர்.

இதற்காக ஜம்முவில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வருகை தந்து வரிசையில் நின்று ரத்து தானம் அளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தீவிரவாத முகாம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைப் பாராட்டி ஜம்மு மற்றும் கத்துவா பகுதியில் ஏராளமானோர் தேசியக் கொடியை ஏந்தியவாறு முப்படையினரை வாழ்த்தி பேரணி சென்றனர்.

<<<<>>>>

எல்லைதாண்டிய தீவிரவாதத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு எடுத்துரைத்தார்.

ஸ்பெயின், ஜெர்மனி, ஃபிரான்ஸ், கத்தார், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் உரையாடிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தீவிரவாத செயல்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகள் குறித்தும் அவர் விளக்கினார்.

இதேபோல் ஃபிரான்ஸ், சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் நிரந்தர மற்றும் உறுப்பினர் அல்லாத நாடுகளின் பிரதிநிதிகளிடமும் ஆபரேஷன் சிந்தூர் குறித்து வெளியுறவு அமைச்சர் எடுத்துரைத்தார்.

<<<<>>>>

இந்தியா – ஈரான் இடையே கூட்டுக் குழுக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இதில் ஈரான் சார்பில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் டாக்டர் **Abbas Araghchi** பங்கேற்க உள்ளதாக வெளியறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா – ஈரான் நாடுகளுக்கு இடையேயான பரஸ்பரம் நலன் சார்ந்த விவகாரங்கள் மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்தக் கூட்டுக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்படுகிறது.

காலை 9 மணிக்கு வெளியிடப்பட உள்ள இத்தேர்வு முடிவுகளை **www.tnresults.nic.in** மற்றும் **results.digilocker.gov.in** என்ற இணையதள முகவரியில் அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வெழுதியவர்கள் இந்த இணையதளங்களில் தங்களது பதிவு எண் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வு முடிவுகளை அறிந்துகொள்ளலாம்.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளில் அளித்த கைப்பேசி எண்ணிற்கும் தனித்தேர்வர்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய கைப்பேசி எண்ணிற்கும் குறுஞ்செய்தி வழியாக தேர்வு முடிவுகள் அனுப்பப்படும் என்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்திய கிரிக்கெட் வீரர் ரோஹித் சர்மா டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், ஒருநாள் போட்டிகளில் தாம் தொடர்ந்து பங்கேற்க உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

38 வயதான ரோஹித் சர்மா 67 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 12 சதம், 18 அரை சதங்களுடன் 4 ஆயிரத்து 301 ரன் எடுத்துள்ளார்.

<<<<>>>>

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த சர்வேஷ் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

பீஹாரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் வில்வித்தை பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மகாராஷ்டிராவின் உஜ்வல் பரத் ஒலேக்கர் தங்கப்பதக்கம் வென்றார்.

மகராஷ்டிரா 16 தங்கம் உட்பட 44 பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

ராஜஸ்தான் 9 தங்கம் உட்பட 16 பதக்கங்களுடன் இரண்டாம் இடத்திலும், கர்நாடகா 8 தங்கம் உட்பட 23 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

தமிழகம் 3 தங்கம், 3 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்று 9வது இடத்தில் உள்ளது.

------------

தைபேய் ஓபன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், மற்றொரு இந்திய வீரரான ஆயுஷ் ஷெட்டியை இன்று எதிர்கொள்கிறார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய தருண் மனப்பள்ளி, இந்தோனேஷியாவின் முகமது ஸக்கி உபைதுல்லாவை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றுப் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** தைபேயின் **Lin Sih Yun**-ஐ எதிர்கொள்கிறார்.

------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தாவை வென்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த கொல்கத்தா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 179 ரன் எடுத்தது.

சென்னை அணியின் பந்துவீச்சாளர் நூர் அகமது 4 விக்கெட் வீழ்த்தினார்.

180 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய் சென்னை அணி, 19 புள்ளி 4 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 183 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக **Dewald Brevis** 52 ரன் எடுத்தார்.

தரம்சாலாவில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**